## இந்திய துணைக் கண்டத்துக்கே எடுத்துக்காட்டாக விளங்கக் கூடிய

# தமிழ்நாடு முதலமைச்சர், ஒன்றிய அரசை எதிர்த்து, எடுக்கும் நடவடிக்கைகளை பல மாநில முதலமைச்சர்கள் உற்றுநோக்கி முடிவெடுக்கிறார்கள்!

## மன்னார்குடி புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டத்தில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**திருவாரூர், மார்ச் 9 -**

**திருவாரூர் மாவட்டத்தில், ஒன்றிய - நகர - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில், புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மன்னார்குடியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சரும் தி.மு.கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.**

**அப்போது, அவர் இளைஞர் அணியின் ஒன்றிய, நகர, பேரூருக்கான, புதிய நிர்வாகிகள் ஒவ்வொருவரும் 2026-இல் இலக்கு 200 எனும் முதலமைச்சர் அவர்களுடைய வார்த்தைகளை மனதில் ஏந்தி, உழைக்க வேண்டும். கழகத்துக்கும், இளைஞர் அணிக்கும் பெருமை சேர்த்திடும் வகையில், உங்களின் பணிகளை அமைத்துக்கொள்ள வேண்டுமென வாழ்த்தி சிறப்புரையாற்றினார்.**

**அவர் ஆற்றிய உரை வருமாறு:**

திருவாரூர் மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில் உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். எத்தனையோ பொறுப்புகள் எனக்கு வந்தாலும், என்றைக்கும் என் மனதிற்கு மிகவும் நெருக்கமான, நெகிழ்ச்சியான பொறுப்பு என்றால், அது இளைஞர் அணிச் செயலாளர் என்ற பொறுப்புதான். அந்த நெகிழ்ச்சியோடுதான் இன்றைக்கு இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ளேன். ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணிக்குப் புதிய நிர்வாகிகளை அறிவித்த பிறகு, நான் முதன்முதலில் சந்திக்கும் நிர்வாகிகள், இந்தத் திருவாரூர் மாவட்ட இளைஞர் அணியைச் சேர்ந்தவர்கள்தான். எனக்கு இது இன்னும் கூடுதல் பெருமை.

### மூன்று விஷயங்கள் அடிப்படை!

10 நாட்களுக்கு முன்பு சென்னையில் நடைபெற்ற இளைஞர் அணி மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் பேசிய போது, தேர்தல் காரணமாக இளைஞர் அணி ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நியமனங்கள் தாமதமானதைக் குறிப்பிட்டேன். முக்கியமாக மூன்று விஷயங்களின் அடிப்படையில்தான் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களின் பரிந்துரைக்கு முதலில் முன்னுரிமைக் கொடுக்கப்பட்டது. அதன்பிறகு மாநில துணைச் செயலாளர்கள் உங்களின் ஊருக்கே வந்து, மாவட்ட, மாவட்டமாக சென்று பல மணி நேரம் அமர்ந்து, உங்களை எல்லாம் நேர்காணல் செய்து, அவர்கள் கொடுத்த பரிந்துரையில்தான் இந்த நியமனம் செய்யப்பட்டது. மூன்றாவதாக, ஏற்கனவே இருக்கின்ற நிர்வாகிகளின் பணிகளை கவனத்தில் எடுத்துக்கொண்டு நியமனங்கள் செய்யப்பட்டு இருக்கிறது.

தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டமாக முரசொலியில் அதற்கான அறிவிப்புகளும் வந்துகொண்டு இருக்கிறது. இந்த நியமனங்களை இறுதி செய்வதற்கு சென்னையில் நான், உங்கள் மண்டல பொறுப்பாளர் ஆனந்தகுமார், மாவட்ட அமைப்பாளர் குமார், அன்பகம் செந்தில் ஆகியோர் இணைந்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மூன்று மணி நேரம் ஒதுக்கி, ஆராய்ந்து இந்த நியமனத்தைச் செய்தோம். ஆகவே, நீங்கள் இந்த இடத்திற்கு சாதாரணமாக நீங்கள் வந்து விடவில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். உங்களை எல்லாம் பார்த்துப் பார்த்துத் தேர்ந்தெடுத்துள்ளோம்.

### பதவி அல்ல, பொறுப்பு!

உங்களுக்கு வழங்கப்பட்டு இருப்பது பதவி அல்ல, நம் தலைவர் சொல்வதுபோல இது மிகப்பெரிய ஒரு பொறுப்பு. ஆகவே, நீங்கள் அனைவரும் பொறுப்போடு செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை ஜான்சிராணி பூங்காவில் நம் மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் உருவாக்கிய இளைஞர் அணி இன்றைக்கு கழகத்தின் முதன்மையான அணியாக வளர்ந்து இருக்கிறது. அதற்கு மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் கழகச் செயலாளர்களின் வழிகாட்டுதல்களும் மிக மிக முக்கியமாகக் காரணம். ஆகவே, இன்றைக்கு இந்த இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து உங்களிடம் ஒப்படைத்து இருக்கிறோம் என்றால், அவர்களை மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் நல்வழிபடுத்தி, அவர்களின் கையைப்பிடித்து நல்வழிகாட்டி, கழகத்தில் எப்படி உழைக்க வேண்டும் என்பதைச் சொல்லித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அன்பகத்தில் இருந்து வருகின்ற நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, அறிவுரைகளாக இருந்தாலும் சரி, தலைமையிலிருந்து தலைவர் அவர்கள் சொல்கின்ற பணியாக இருந்தாலும் சரி, நீங்கள் ஒன்றிய அமைப்பாளராக இருந்தால், ஒன்றியச் செயலாளரின் அனுமதியைப் பெற்று, அவர்களின் வழிகாட்டுதலோடு செய்ய வேண்டும். அதேபோல் நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நகர, பேரூர் கழக செயலாளர்களிடம் பேசிக்கொண்டு அதற்கான முன்னெடுப்பு களை செய்ய வேண்டும். கழகத்தின் அடித்தளம் என்றால் அது ஒன்றிய, நகர, பேரூர், பகுதி அமைப்புகள்தான்.

### வழிவிட்டு விடக்கூடாது!

இளைஞர் அணிக்கு அடித்தளம் என்னவென்றால் ஒன்றியம், நகர, பேரூர், பகுதிகளில் இயங்கக்கூடிய இளைஞர் அணி தம்பிமார்கள் நீங்கள்தான் என்பதைச் சொல்வதில் மாற்றுக்கருத்து கிடையாது. அதனால்தான் சொல்கிறேன் நீங்கள் எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடியும் சரியான அடியாக இருக்க வேண்டும். எந்த தவறுக்கும் இடம் கொடுக்கக் கூடாது. மாற்றுக் கட்சியில், எதிர்க்கட்சியில் இருப்பவர்கள், எதிர் முகாம்களில் இருப்பவர்கள், எந்த நேரத்தில் என்ன தவறு நடக்கும் அதை எப்படி வெளிப்படுத்தலாம் என்பதற்காக காத்துக் கொண்டிருப்பார்கள்.





அதற்கு எந்த விதத்திலும் நீங்கள் வழிவிட்டு விடக்கூடாது.

இளைஞர் அணியைப் பொறுத்தவரைக்கும் களத்தில், தலைமையில் சொல்வதையும், உங்கள் மாவட்டத்தில் சொல்வதையும் கேட்டு சரியாக நடந்தீர்கள் என்றால், உங்களுக்கான பணிகளை சரியாக செய்தீர்கள் என்றால் நிச்சயம், தலைவர் உங்களுக்கான அங்கீகாரத்தைச் சரியான நேரத்தில் கொடுப்பார். அதற்கு சிறந்த எடுத்துக்காட்டுகள் இந்த மேடையிலும், அரங்கத்திலும் இருக்கிறார்கள். இங்கு இருக்கின்ற மாநிலத் துணைச் செயலாளர் இளையராஜா அவர்கள் மிகச் சிறப்பாக, திருவாரூர் மாவட்ட அமைப்பாளராகப் பணியாற்றியவர். அதனால்தான் கழகத் தலைவர் அவர்கள் அவரை தேர்ந்தெடுத்து அவருக்கு மாநில துணைச் செயலாளர் என்ற பொறுப்பை வழங்கினார்.

### சிறப்பாக இளைஞர் அணிப் பணி!

அதேபோல் இந்த மண்டலத்தில் இளைஞர் அணி பணிகளை ஒருங்கிணைக்கின்ற சகோதரர் ஆனந்த குமார் அவர்கள் மிகச் சிறப்பாக நாமக்கல் மாவட்டத்தின் துணை அமைப்பாளராக பணியாற்றியவர். அதனால்தான் தலைவர் அவர்கள் அவருக்கும் மாநில துணைச் செயலாளராக பொறுப்பு உயர்வு கொடுத்தார். அதேபோல் மாவட்ட அமைப்பாளர் சகோதரர் பனங்குடி குமாரும் அப்படித்தான். ஒன்றிய அமைப்பாளராக இருந்து, சிறப்பாக இளைஞர் அணி பணிகளை எல்லாம் செய்து இன்றைக்கு மாவட்ட அமைப்பாளராக வளர்ந்திருக்கிறார். இளைஞர் அணியில் சிறப்பாக செயல்பட்ட பலர் இன்றைக்கு இளைஞர் அணியில் மட்டுமல்ல, தாய்க்கழகத்திலும் மிகப்பெரிய பொறுப்புகளில் இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல அமைச்சர்களாக, சட்டமன்ற உறுப்பினர்களாகவும் பலர் உள்ளனர். நம் முதலமைச்சர் கூட நம் இளைஞர் அணியில் இருந்து வந்தவர்தான். ஆகவே இதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு சிறப்பாகப் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உங்களின் பணிகளை தொடர்ந்து உன்னிப்பாக கவனித்துக் கொண்டே இருப்பேன். உதாரணத்திற்கு, முத்துப்பேட்டை ஒன்றியம் கடைக்கோடியில் இருக்கக்கூடிய ஒரு ஒன்றியம். நம் செயல்பாடுகளை எல்லாம் அங்கு யார் அங்கு பார்க்கப் போகிறார்கள் என்று நீங்கள் நினைத்து விடக்கூடாது. ஒவ்வொரு ஒன்றியத்தில், நகரத்தில், பேரூரில் இருக்கின்ற அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களின் பணிகளை நான் தனிப்பட்ட முறையில் நிச்சயம் தொடர்ந்து பார்த்துக் கொண்டே இருப்பேன். ஒவ்வொருவரைப் பற்றியும் கண்டிப்பாக தொடர்ந்து விசாரித்துக் கொண்டுதான் இருப்பேன்.

### மினிட் புத்தகம்தான் ஆதாரம்!

நீங்கள் செய்கின்ற ஒவ்வொரு வேலையையும் மினிட் புத்தகங்களில் பதிவுசெய்து, ஆவணப்படுத்துங்கள். திருவாரூர் மாவட்டத்தில் மட்டும்தான் இளைஞர் அணிக்கு என்று முதன்முறையாக மினிட் புத்தகம் கொடுக்கப்பட்டது. அதற்கு மாவட்டக் கழகத்திற்கு மீண்டும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மினிட் புத்தகம்தான் உங்களின் பணிகளுக்கான ஆதாரம். யாராவது உங்கள் மீது குற்றம் சொன்னார்கள் என்றால், அவர் எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொள்வதில்லை என்று சொன்னாலும், அதற்கு இல்லை என்று நீங்கள் சொல்வதற்கான ஆதாரம்தான் அந்த மினிட் புத்தகம். ஆகவே மினிட் புத்தகங்களைச் சரியாகப் பராமரித்துக் கொள்ளுங்கள். நீங்கள் சரியாகப் பணியாற்றினால் உங்களுக்கான அங்கீகாரத்தை நம் தலைவர் அவர்களிடம் சொல்லி நிச்சயம் வாங்கித் தருவேன், என்ற வாக்குறுதியையும், இந்த நேரத்தில் நிச்சயம் உங்களுக்குத் தருகிறேன்.

இளைஞர் அணி சார்பாக பல்வேறு பணிகளை நாம் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம். ‘இல்லம் தோறும் இளைஞர் அணி’ என ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று இளைஞர்களை நம் கழகத்தில் சேர்க்கும் பணிகளை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம். இங்கு வந்திருக்கின்ற புதிய நிர்வாகிகள் அந்தப் பணிகளை தீவிரப்படுத்த வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வீடு, வீடாகச் சென்று கழகத்தின் சாதனைகள், தலைவரின் திட்டங்கள், அரசின் சாதனைகளை இளைஞர் அணிக்கு இருக்கின்ற வரலாறு, சிறப்புகளை எல்லாம் மக்களிடம் எடுத்துச் சொல்லி புரியவைத்து, இளைஞர்களை இளைஞர் அணியில் சேர்ப்பதற்கான பணிகளில் ஈடுபடுங்கள்.

### பயிற்சிப்பாசறைக் கூட்டங்கள்!

இதுவரை சட்டமன்ற தொகுதிதோறும் பயிற்சிப்பாசறைக் கூட்டங்களை நடத்தினோம். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல பயிற்சிப்பாசறை கூட்டங்கள் நடத்தினோம். அதை இன்றைக்கு ஒன்றிய அளவில் நடத்தவும் திட்டமிட்டுள்ளோம். இன்றைக்கு நிர்வாகிகள் நமக்கே பயிற்சிப்பாசறைகள் மிக மிக அவசியமாக தேவைப்படுகிறது. அதை நடத்தவும் இப்போது தயாராகிக் கொண்டிருக்கிறோம்.

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் கலைஞர் நூலகத்தை திறக்க வேண்டும் என்று தலைவர் சொன்னார். நூற்றுக்கும் மேற்பட்ட நூலகங்களை இதுவரை திறந்துள்ளோம். இன்னும் 6 மாதங்களில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும், நம் இளைஞர் அணி நூலகங்கள் திறக்கப்பட்டிருக்கும். வருகின்ற வழியில் மன்னார்குடியில் நம் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைப் பார்த்து விட்டுத்தான் வந்தேன். எனவே அந்த நூலகங்களை எல்லாம் சரியாகப் பராமரிக்கும் பணிகளில் நீங்கள் ஈடுபட வேண்டும். நிறைய மாணவர்களை, இளைஞர்களை நூலகத்திற்கு அழைத்து வரும் முன்னெடுப்பை எடுக்க வேண்டும்.

### 200 சிறந்த இளம் பேச்சாளர்கள்!

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, தலைவர் அவர்கள் இளைஞர் அணிக்கு இட்ட கட்டளையின்படி, ‘என் உயிரினும் மேலான’ பேச்சுப்போட்டியை நடத்தி 200 சிறந்த இளம் பேச்சாளர்களை தலைமைக் கழகத்திற்கு ஒப்படைத்துள்ளோம். அவர்களை எல்லாம் நம் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்களின் ஒப்புதலோடு ஒன்றிய அளவில் நகரம், பேரூர் அளவில் சிறுசிறு தெருமுனைக் கூட்ட ங்கள், திண்ணைப் பிரச்சாரங்கள் போன்ற பணிகளில் பயன்படுத்துங்கள்.

தலைவரின் பிறந்த நாளை முன்னிட்டு, இளைஞர் அணி சார்பாக தமிழ்நாடு முழுக்க பொதுக் க்கூட்டங்கள், அனைத்துத் தொகுதிகளிலும் நடத்தப்படும் என்று முரசொலியில் அறிவிப்பு வெளியிடப்பட்டு, 2-ஆம் தேதியிலிருந்து தொடர்ச்சியாக இளம் பேச்சாளர்களை வைத்து நடத்திக் கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் பாகத்திற்கு ஒருவரை தேர்ந்தெடுத்து சமூக வலைதளப் பயிற்சி வகுப்புகளைத் தொடர்ந்து நடத்தி இருக்கிறோம். நான் இங்கு வருவதற்கு முன்பு, இந்த மேடையில் உங்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கும். அந்தப் பயிற்சி உங்களுக்கு நிச்சயமாக உபயோகமாக இருக்கும் என்று நம்புகிறோம். அவர் கொடுத்த வழிகாட்டுதல்களை எல்லாம் நீங்கள் தொடர்ந்து பின்பற்றுங் கள்.

### இந்தித் திணிப்பு பிரச்சினை!

தேர்தலுக்கு இன்னும் சரியாக ஒரு வருடம்தான் இருக்கிறது. அதற்கு நாம் அனைவரும் இப்போதிருந்தே தயாராக வேண்டும். இன்றைக்கு தமிழ்நாடு மிக மிக முக்கிய மான பிரச்சினைகளை எதிர்கொண்டு இருக்கிறது. பெரியார், அண்ணா, கலைஞர் காலத்தில் நடந்த இந்தித் திணிப்பு பிரச்சினை இன்றைக்கு வேறு வடிவத்தில் வருகிறது. இந்தியைக் கொண்டு வந்து திணித்தால், நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று அவர்களுக்குத் தெரியும். அதனால்தான், அதன் பெயரை மாற்றி மும்மொழிக் கொள்கை என்று நம் மீது திணிப்பதற்கு ஒன்றிய அரசு முயற்சிக்கிறது.

மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் தமிழ்நாட்டுக்குக் கல்விக்குத் தரவேண்டிய ரூ.2,150 கோடியை தருவேன் என்று ஒன்றிய அமைச்சர் வெளிப்படையாக மிரட்டுகிறார். ஆனால், நீங்கள் 2,150 கோடி இல்லை பத்தாயிரம் கோடி கொடுத்தாலும், தமிழ்நாட்டுக்குள் மும்மொழிக் கொள்கையை அனுமதிக்க மாட்டேன் என்று நம் தலைவர் அவர்கள் ஆணித்தரமாகச் சொல்லிவிட்டார். இன்றைக்குப் பல மாநிலங்கள் தலைவரின் பேச்சைத்தான் பார்க்கிறாகள். தமிழ்நாடு முதலமைச்சர், ஒன்றிய அரசை எதிர்த்து, என்ன நடவடிக்கை எடுக்கிறார் என்று பார்க்கிறார்கள். பல மாநில முதலமைச்சர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்க கூடியவர் நம் முதலமைச்சர் அவர்கள்.

உதாரணத்திற்கு ஹரியானாவின் தாய்மொழி ஹரியானவி. நிறைய பேர் இந்தி என்று நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். இப்போது அதை யாருமே பேசுவதில்லை. அனைவரும் இந்திதான் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். அதேபோல் பீகாரின் தாய் மொழி பீகாரி. அந்த மொழியும் கிட்டத்தட்ட அழிந்துவிட்டது. மகாராஷ்டிராவின் தாய் மொழி மராத்தி. அங்கும் இந்திதான் ஆதிக்கம் செலுத்துகிறது. அதே நிலைமை நம் தாய்மொழி தமிழுக்கு ஏற்படக்கூடாது என்றால் நாம் என்றைக்கும் இந்தித் திணிப்பை அனுமதிக்கக்கூடாது.

நாம் ஒரு பக்கம் மும்மொழிக் கொள்கையை உயிரைக்கொடுத்து, எதிர்த்துக்கொண்டு இருந்தால், மும்மொழிக் கொள்கை வேண்டும் என்று இன்றைக்கு ஒரு கூட்டம் கையெழுத்து வாங்குகிறது.

இன்று காலையில்கூட பத்திரிக்கையாளர்கள் சந்திப்பில் என்னைக் கேட்டார்கள். பிஸ்கட் எல்லாம் கொடுத்து, கையெழுத்து வாங்க அழைத்துச் செல்கிறார்கள் என்றார்கள். ஏற்கெனவே ஒருமுறை இதுபோல்தான் மிஸ்டுகால் கால் கொடுத்து,

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்

